CC 104/2015

PW - 1 Rajalakshmi W/o. Backiyam 22.09.2025

குவிமுச பிரிவு 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

எனது சொந்த ஊர் மதகுபட்டி அருகே உள்ள நடுவைபட்டி என்றால் சரிதான். நான் மதகுபட்டியில் அழகுசாதனம் செய்யும் கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். அசா2 வள்ளியம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 4 எனது அப்பா என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் மேலூர் அம்பேத்கார் நகரில் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகள் எனது உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் போலீசாரிடம் புகார் கொடுத்தேனா அல்லது புகார் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். சம்பவ நடந்த இடத்திற்கும், மேலூர் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 500 மீட்டர் இருக்கும். சம்பவம் நடந்த உடனே மேலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ஆம். சம்பவம் நடந்த தேதி, மாதம் என்ன என்றால் சரியாக ஞாபகம் இல்லை, 2011, அல்லது 2012 இருக்கும், எங்கள் வீட்டிற்கு அருகே நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். இதுபோன்ற சம்பவம் நடந்திருந்தால் எங்கள் வீட்டிற்கு அருகே உள்ளவர்களுக்கு தெரிந்திருக்கும் என்றால் சரிதான்.

2) எனது அப்பாவை என்னுடன் வைத்துக்கொண்டு அவரது சொத்துக்களை எனது பெயரில் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல, எனது அப்பா மனபூர்வமாக அந்த சொத்துக்களை எழுதி கொடுத்தார். அதேபோல் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தில் எனக்கு சிறு காயமும் ஏற்பட்டதாக எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, ஊமைக்காயங்கள் ஏற்பட்டது. எதிரிகள் எந்த வார்த்தையை பயன்படுத்தி என்னை திட்டினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் மிக அருவருக்கதக்க வார்த்தைகளை பயன்படுத்தி எதிரிகள் என்னை திட்டினார்கள், அந்த வார்த்தைகளை சொல்ல நான் விரும்பவில்லை. சம்பவம் நடந்தபோது யார் எங்களை விலக்கிவிட்டார்கள், நேரடியாக பார்த்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அனைவரும் வேடிக்கை பார்த்தார்கள், எனது பெற்றோர்கள்தான் விலக்கிவிட்டார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.A. Eco

படித்துள்ளேன். நான் போலீசாரிடம் கொடுத்த புகாரை நான் எழுதினேனா அல்லது போலீசார் எழுதியதில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். புகார் கொடுத்த அன்று போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். இந்த இடம் சம்மந்தமாக எங்கள் ஊர் பெரியோர்கள் முன்னிலையலி பஞ்சாயத்துபேசினோமோ என்றால் இல்லை. நான் சொன்னதுபோல், சொன்னநேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, எதிரிகள் எனது சொத்துக்களை பறித்துகொள்வார்கள் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.